பேரூராட்சி அலுவலகம்,
குறிஞ்சிப்பாடி.

<u>ந.க.எண். அ1/39/2010</u> <u>நாள் :–21.06.2010</u>

# <u>ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு</u>

1. குறிஞ்சிப்பாடி பேரூராட்சிக்கு பாத்தியப்பட்ட இதன் கீழ் இணைப்பில் கண்ட வேலைகளை செய்துமுடிப்பதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சியில் பதிவு செய்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் **07.07.2010 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி** வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் குறிஞ்சிப்பாடி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல் எந்த திட்டத்தில் எந்த வேலைகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் என்பது தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.
3. ஒவ்வொரு வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி நமூனாவின் தொகையை இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பேரூராட்சி அலுவலகத்தில் **06.07.2010 முற்பகல் 5.00 மணிக்குள்** அலுவலக நேரத்தில் ரொக்கமாக செலுத்தி ரசீது பொற்றுக் கொள்ள வேண்டும்.
4. தேசீய பத்திரங்கள் இணைக்கப்பட்டால் அவைகளை ஒப்பந்ததாரர்கள் செயல் அலுவலர் பேரூராட்சி அலுவலகம், குறிஞ்சிப்பாடி அவர்களின் பெயருக்கு அஞ்சல் அலுவலகத்தில் அடமானம் செய்து கொடுக்கப்படவேண்டும். அவ்வாறு செய்யப்படாமல் இணைக்கப்படும் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். பத்திரங்கள் **01.05.2010–**க்கு பின் வழங்கப்பட்டவையாக இருக்க வேண்டும்.
5. அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் இலாக்கா சம்மந்தப்பட்ட சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு வேலையினை செய்து முடிப்பதாக ரூ.20/–. மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தம் செய்து கொடுக்க வேண்டும்.
6. ஒப்பந்தப்புள்ளிகளை ஷெட்டியூல் அடிப்படையில் கோரப்படுகிறது.
7. ஷெட்டியூல் ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள் பேரூராட்சி அலுவலகத்தில் **06.07.2010 முற்பகல் 5.00 மணி** வரை ஷெட்டியூல் பெற்றுக்கொள்ளலாம். வேலைக்கான டேவணித் தொகையை **07.07.2010 பகல் 12.00 மணிக்குள்** செலுத்தி ரசீது பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
8. பெறப்பட்ட ஷெட்டியூல் டெண்டர் விண்ணப்பங்கள் **07.07.2010 பிற்பகல் 3.30 மணிக்கு** ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலரால் திறக்கப்படும்.
9. ஒப்பந்தம் செய்யப்பட்ட வேலையை ஒப்பந்ததாரரே செய்து முடிக்க வேண்டும், கீழ் குத்தகைக்கு விடக்கூடாது.
10. காலந்தவறி வரும் ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் சரியாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் டேவணித்தொகை செலுத்திய ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.
11. ஒப்பந்ததாரர்கள் செயல் அலுவலர் குறிப்பிடும் இடத்தில் இருந்து இலாக்கா மூலம் வழங்கும் வேலைக்கான பொருள்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.
12. ஒப்பந்ததாரர்களுக்கு வேலை செய்ய ஆணை கிடைத்தவுடன் 3 தினங்களுக்குள் ரூ. 20/–க்கு ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுத்து வேலையை துவங்கி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டும். தவறினால் வைப்புத் தொகையை பறிமுதல் செய்யப்படுவதுடன் அறிவிப்பின்றி வேலை உத்திரவு ரத்து செய்யப்படும். அதன்பின் மீதமுள்ள வேலையை செய்து முடிக்க ஏற்படும் கூடுதல் செலவினம் மற்றும் உண்டான சகல நஷ்டங்களுக்கும் ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்.
13. மூடி மூத்திரையிடப்படாத ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
14. இலாக்கா மூலம் வழங்கப்படும் பொருட்களுக்கு ஒப்பந்த நமுனாவில் குறிப்பிட்டுள்ளவாறு கிரையத்தொகை பிடித்தம் செய்யப்படும்.
15. வேலைகளுக்கான டேவணித்தொகை 3 % சதவிகிதம் செலுத்த வேண்டும். 1 % சதவிகிதம் டெண்டர் கோரும் போது செலுத்த வேண்டும். மீதமுள்ள 2 % சதவிகிதம் வேலைக்கான பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.
16. அட்டவணையில் குறிப்பிட்ட காலக் கெடுவிக்குள் பணிகளை செய்து முடிக்கக் தவறினால் அபராதத் தொகை வசூலிக்கப்படும்.
17. பணி பட்டியலில் வேலையின் மதிப்புக்கு வருமான வரி 2% , வருமான மேல்வரி 12 ½ % , விற்பனைவரி 2% , விற்பனை மேல் வரி 5% பிடித்தம் செய்யப்படும். பணிகளின் மதிப்பட்டுக்கு 0.3% தொழிலாளர் நல நிதி வாரியத்திற்கு செலுத்தி கேட்பு காசோலையாக தர வேண்டும்.
18. ஒப்பந்தத்திற்காக செலுத்திய வைப்புத்தொகை தணிக்கை முடிந்து தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் திரும்ப வழங்கப்படும்.
19. பணவரம்பு உள்ளவர்கள் மட்டுமே டேவணித்தொகையை செலுத்தி ஒப்பந்தப்புள்ளிகள் கோர வேண்டும்.
20. மற்ற விபரங்களை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் நேரில் தெரிந்து கொள்ளலாம்.
21. ஒப்பந்தப்புள்ளிக்கான தேதியை ஒத்தி வைக்க செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

த.பி.பா….. 2

## <u>வேலைகளின் விபரம்</u>

| வ. எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) | டேவணி தொகை ( ரூ ) | ஷெட்டியூல் கட்டணம் ( ரூ ) | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| **அனைத்துப்பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித்திட்டம் –2010–11 அ1/39/2010** | | | | | |
| 1. | மீனாட்சிப்பேட்டை புது சுப்ரமணிய கோவில் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 10.00 | 10,000 | 6240 | 90 நாட்கள் |
| 2 | ஆஸ்பத்திரி வீதி (பழைய போலிஸ் ஸ்டேஷன்அருகில்) கடைகள் கட்டுதல் | 13.00 | 13,000 | 6240 | 120 நாட்கள் |
| | **மொத்தம்** | **23.00** | | | |

செயல் அலுவலர்,
பேரூராட்சி அலுவலகம்,
குறிஞ்சிப்பாடி.

**<u>பெறுதல் :</u>**
குறிஞ்சிப்பாடி பேரூராட்சி மன்ற தலைவர், துணைத்தலைவர், மற்றும் உறுப்பினர்கள்.
குறிஞ்சிப்பாடி பேரூராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் அனைவருக்கும்.

**<u>நகல் :</u>**

1. மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் மாவட்டம், கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், கடலூர் மண்டலம், கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
4. சட்டமன்ற உறுப்பினர் , குறிஞ்சிப்பாடி தொகுதி , குறிஞ்சிப்பாடி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
5. உதவி செயற்பொறியாளர் ( பேரூராட்சிப் பணிகள்) கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
6. செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலகம், வடலூர்/ கெங்கைகொண்டான்/மங்கலம்பேட்டை/பெண்ணாடம்/ திட்டக்குடி / தொரப்பாடி /மேல்பட்டாம்பாக்கம்/விளம்பரம் பலகையில் பிரசுரிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.
7. இளநிலைப் பொறியாளர், பேரூராட்சி அலுவலகம், வடலூர் தகவலறிய.
8. கிராம நிர்வாக அலுவலர், குறிஞ்சிப்பாடி விளம்பரப் பலகையில் பிரசுரிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.
9. உதவி ஆய்வாளர், காவல்துறை , குறிஞ்சிப்பாடி
10. உதவி அஞ்சல் அலுவலர், அஞ்சல் அலுவலகம், குறிஞ்சிப்பாடி
11. அலுவலக விளம்பரப் பலகைக்கு.
12. கோப்புக்கு.